## கீழக்கரை நகர்மன்ற 08.09.2021–ம் தேதிய கூட்டத்தின் நடவடிக்கைகள்

**பொருள் :1**

கீழக்கரை நகராட்சியில் ஒப்பந்தகாரராக பதிவு செய்ய வேண்டி கதவு எண்.7/7, இராஜாக்கள் பாளையம், சிக்கல் போஸ்ட், கடலாடி தாலுகா, இராமநாதபுரம் மாவட்டம் என்ற முகவரியில் உள்ள திரு. இரா. இரமேஸ்பாபு த/பெ. இராதாகிருஷ்ணன் என்பவர் கொடுத்துள்ள விண்ணப்பத்தின்படி, அன்னாரை இந்நகராட்சி ஒப்பந்ததாரராக ரூ.15 இலட்சம் வரையிலான பணிகள் எடுத்து செய்வதற்கும், ஒப்பந்தகாரர் வகுப்பு நான்கில் (Class IV) பதிவு செய்வதற்கும் இந்நகராட்சிப் பொறியாளரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்காணும் ஒப்பந்ததாரர் மூலம் இந்நகராட்சி சேவை மைய பற்றுச்சீட்டு எண்.133/K1/2/21-22/0002365, 133/K1/2/21-22/0002366, நாள்.25.08.2021ன்படி பதிவு கட்டணம் ரூ. 1000 + ரூ.10000 செலுத்தப்பட்டுள்ளது மன்றத்தின் தகவலுக்கு முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண்.383/2021/இ1)**

**அலுவலக குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்

**தீர்மானம் எண்.891அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :2**

சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் ந.க.எண்.15959/ 2021/ WS1, நாள்.27.08.2021–ந் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளதிற்கிணங்க, மதுரை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகத்தில், சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால், 01.09.2021–ந் தேதி காணொளி ஆய்வுக் கூட்டத்தில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவாகாரங்கள் அமைச்சகம் ஜல் ஜீவன் திட்டம் (Jal Jeevan Mission (Urban) அல்லது AMRUT 2.0) செயல்படுத்தும் பொருட்டு, இந்நகராட்சியில் சலைப்பதிவேடு பராமரிப்பதற்கு, இந்நகர்ப் பகுதியில் உள்ள சாலைகள், குடிநீர் விநியோகம், வடிகால், தெருவிளக்குகள் மற்றும் இதர அரசு கட்டிடங்கள் ஆய்வு மேற்கொண்டு நவீன முறையில் அளவீடு செய்து புகைப்படத்துடன் கூடிய அறிக்கைகள் தயார் செய்து ஒருவார காலத்திற்குள் ஒப்படைக்க தெரிவிக்கப்பட்டுள்ளதிற்கிணங்க, இப்பணியினை தனியார் தொழில்நுட்ப ஆலோசகர் (Private Technical Consultant) மூலம் மேற்கொள்வதற்கு ரூ.9,20,000/–க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

மேற்காணும் செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், இப்பணியினை விலைப்புள்ளி பெற்று உடனடியாக மேற்கொள்ளவும், நகராட்சி பொறியாளரால் நகர்மன்ற அனுமதி கோரப்பட்டுள்ளது. அதன்படி, மேற்காணும் பணியை மேற்கொள்ளும் பொருட்டு அனுமதிக்காக மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண். 519/2021/இ1)**

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1. சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரையின்படி, குறுகிய காலத்திற்குள் இப்பணி முடிக்க வேண்டியுள்ளதால், பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு பொறியாளர்களால் ரூ.9,20,000/—க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
3. இப்பணியினை விலைப்புள்ளி பெற்று உடனடியாக மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.892அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் :3</u>**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 21 வார்டு பகுதிகளில் 11 இடங்களில் சிறு விசை பம்ப் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. தற்போது சிறு விசை பம்புகள் பழுதாகி உள்ளதால் அதனை சரிசெய்து தருமாறு இந்நகர் பொதுநல அமைப்பின் மூலம் கோரப்பட்டுள்ளது. மேலும், இது தொடர்பாக தினசரி நாளிதழில் செய்தியாகவும், பொதுமக்களிடமிருந்தும் புகார்கள் வந்த நிலையில், இந்நகராட்சி பொறியாளரின் குறிப்பின்படி இவ்வலுவலக பொதுபணி மேற்பார்வையாளர் மற்றும் மின்பணியாளரால் இந்நகர் பகுதியில் 11 இடங்களில் அமைந்துள்ள சிறுமின்விசை பம்புகள் ஆய்வு செய்யப்பட்டதில் 7 இடங்களில் உள்ள சிறுமின் விசை பம்புகள் பழுதாகி உள்ளது என்று இவ்வலுவலக மின்பணியாளர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து இந்நகர்ப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சிறுமின் விசை பம்புகளில் 7 இடங்களில் பழுதான சிறுமின்விசை பம்புகளை பழுதுநீக்கம் செய்வதற்குரிய ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ள இந்நகராட்சிப் பொறியாளர்களால் ரூ.2,50,000/—க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும் இச்செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு அனுமதி கோரப்பட்டுள்ளது மன்றத்தின் ஒப்புதலுக்கு முன் வைக்கப்படுகிறது.
(கோப்பு எண். 572/2021/இ1)

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1. இந்நகர்பகுதி மக்களின் குடிநீர் அத்தியாவசிய தேவையை கருத்தில் கொண்டு பொறியாளர்களால் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2,50,000/—ஐ மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. இந்நகர்பகுதியில் 7 இடங்களில் பழுதான சிறுமின்விசை பம்புகளை பழுதுநீக்கம் செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளலாம்.
3. இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.893அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் :4</u>**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 3, பழைய உரக்கிடங்கு, வார்டு எண்.7 ஆடறுத்தான் தெரு அருகில் மற்றும் வார்டு எண்.20 ரகுமானியா நகர் பகுதியில் உள்ள குடியிருப்புகளுக்கு குடிநீர் பகிர்மான குழாய் அமைக்கப்படாததால் அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களின் குடியிருப்புகளுக்கு குடிநீர் இணைப்பு கொடுக்க இயலாத சூழ்நிலை உள்ளது.. தற்சமயம் அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்க கோரி விண்ணப்பம் செய்துள்ளனர். அப்பகுதி பொதுமக்களின் குடிநீர் தேவையை கருத்தில் கொண்டும், நலன் கருதி, மேற்காணும் பகுதியில் PVC பகிர்மான குழாய்கள் அமைத்து குடிநீர் விநியோகம் செய்ய வேண்டியுள்ளது. மேலும், முழு அளவில் குடிநிர் விநியோகத்தினை மக்களுக்கு கொண்டு செல்லும் வகையில் இப்பணிக்கு ரூ.2,85,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும், இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு, அதற்குரிய செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், இந்நகராட்சி பொறியாளர்களால் அனுமதி கோரப்பட்டுள்ளது மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண்.299/2021/இ1)**

**<u>அலுவலக குறிப்பு</u>**

1) பொதுமக்களின் குடிநீர் தேவையை கருத்தில் கொண்டு, மேற்காணும் பகுதியில் PVC பகிர்மான குழாய்கள் அமைப்பதற்கு ரூ.2,85,000/-க்கு பொறியாளர்களால் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2) இந்நகராட்சி வருவாய் குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.894 அனுமதிக்கப்பட்டது.</u>**

**ஒம்/—ப. சதீஷ்குமார்,**
**தனி அலுவலர் / ஆணையாளர்**
**கீழக்கரை நகராட்சி.**

**/ உண்மை நகல் /**

**ஆணையாளர்**
**கீழக்கரை நகராட்சி.**